## மாதிரி வினாத்தாள் – 2019–2020

**வகுப்பு : 10** **பாடம் : தமிழ் முதல் தாள்**

**கால அளவு : 15 நிமிடம் + 2.30 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 100**

### (செய்யுள், உரைநடை)

### பகுதி – I

### மதிப்பெண்கள் : 14

**பலவுள் தெரிக.** **(14X1=14)**

1. காசிக்காண்டம் என்பது –

அ. காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஆ. காசி நகரத்தின் மறுபெயர்

இ. காசி என்ற புலவர் படைத்த நூல் ஈ. காசி நகரத்திற்கு வழிப்படுத்துவது

2. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி–

அ. ஜால்ரா ஆ. உறுமி

இ. பறை ஈ. நாகசுரம்

3. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் . . .

இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் . . . .

அ. அமைச்சர், மன்னன் ஆ. அமைச்சர், இறைவன்

இ. இறைவன், மன்னன் ஈ. மன்னன், இறைவன்

4 . ஜெயகாந்தன் படைப்புகளில் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற நூல் –

அ. யாருக்காக அழுதான் ஆ. சில நேரங்களில் சில மனிதர்கள்

இ. உன்னைப் போல் ஒருவன் ஈ. ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்

5. மெய்க்கீர்த்திகள் –

அ. புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை

ஆ. மக்களின் எண்ணங்களாகப் புகழ்ந்து பாடப்பட்டவை

இ. இலக்கியங்களாக ஓலையில் எழுதப்பட்டவை

ஈ. புகழைப் பரப்பும் வகையில் துணியில் எழுதப்பட்டவை

6. **செய்தி 1**–ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

**செய்தி 2** – காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம்செய்தவர்கள் தமிழர்கள்.

அ. செய்தி 1 மட்டும் சரி ஆ. செய்தி 1 சரி, 2 செய்தி 2 தவறு

இ. செய்தி 2 மட்டும் சரி ஈ. செய்தி 1 சரி, 2 செய்தி சரி

7. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் –

அ. இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ. என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ. இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ. இறந்துவிடாது இகழ்ந்தால் என்மனம்

8. "இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே!" – இவ்வடியில் பத்தும் எட்டும் என்பன

அ. சங்க இலக்கியங்கள் ஆ. காப்பிய இலக்கியங்கள்

இ. அற இலக்கியங்கள் ஈ. சிற்றிலக்கியங்கள்

9. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளுக்குப் பொருத்தமான தலைப்பு எது?

**குறிப்பு** : 1) கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.

2)திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிக்கிறது.

அ. இணையம் ஆ. மடிக்கணினி

இ. கணினி ஈ. செயற்கை நுண்ணறிவு

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (10, 11, 12, 13, 14) விடைதருக.**

"வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதிரு நகர வீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"

10. மேலுள்ள பாடலடிகள் இடம்பெற்ற நூல் எது?

அ. நற்றிணை ஆ. சிலப்பதிகாரம்

இ. புறநானூறு ஈ. குறுந்தொகை

11. 'காருகர்' – என்பதன் பொருள் –

அ. தருபவர் ஆ. பெறுபவர்

இ. நெய்பவர் ஈ. விற்பவர்

12. பாடலில் அமைந்துள்ள மோனைச் சொற்கள் –

அ. பகர்வனர், பட்டினும் ஆ. காருகர், துகிரும்

இ. பட்டினும், மயிரினும் ஈ. நூலினும், அகிலும்

13. இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள் –

அ. துகிர், தூசு ஆ. ஆரம், அகில்

இ. சுண்ணம், அகில் ஈ. பட்டு, பருத்தி

14. பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்கள் –

அ. பட்டினும், கட்டு ஆ. தூசும், துகிரும்

இ. ஆரமும், அகிலும் ஈ. மயிரினும், நூலினும்

## பகுதி –II

## மதிப்பெண்கள் : 20

## பிரிவு–1

**எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்குகு மிகாமல் விடையளிக்க.** **(5x2=10)**

15. 'இயந்திர மனிதன் பெப்பர்' குறித்து ஏதேனும் இரண்டு கருத்துகளை எழுதுக.

16. வள்ளல்களை இலக்கியங்கள் போற்றியமைக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் எழுதுக.

17. தமிழ்நாட்டு நெல்வகைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

18. தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்து யாது?

19. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு – இத்தொடரை இரண்டு தொடர்களாக்குக.

20. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று கரகாட்டம்.

ஆ) உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான்.

21. பல்துறை வளர்ச்சியில் மொழிபெயர்ப்பின் பங்கினைக் குறிப்பிடுக.

## பிரிவு–2 (5x2=10)

**எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்குகு மிகாமல் விடையளிக்க.**

**(28 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க.)**

22. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல்களாக, பரிபாடல் குறிப்பிடுவன யாவை?

23. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்தி எழுதுக.

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் | நச்சப் படாதவன் செல்வம் |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |
| விரும்பப்படாதவர் செல்வம் | உயிரினும் ஓம்பப் படும் |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் | நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று |

24. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" என்னும் தொடரில் உள்ள உவமை உணர்த்தும் கருத்து யாது?

25. "மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே! "

மண்ணுலகப் பேரரசு …………, தென்னன் மகள்……………, திருக்குறளின் மாண்புகழ்…………

மூன்று இடங்களுக்குமான ஒரே விடை என்ன? பாடலின் ஆசிரியர் யார்?

26. பரஞ்சோதிமுனிவர், திருவிளையாடற்புராணம் தவிர்த்து இயற்றிய வேறு நூல்கள் இரண்டினை எழுதுக.

27. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

28. **'செயற்கை'** எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பகுதி– III

## மதிப்பெண்கள் : 50

### பிரிவு –1 (3X5 =15)

**எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.**

29. விருந்தை எதிர்கொள்ளும் தன்மை குறித்துக் குறுந்தொகையும் கொன்றைவேந்தனும் பதிவு செய்துள்ள கருத்துகள் யாவை?

30. ஜெயகாந்தனிடம் தொடுத்த கேள்விகள் இரண்டினையும், அதற்கு அவர் கொடுத்த பதில்கள் இரண்டினையும் எழுதுக.

31. மொழிபெயர்ப்பைக் கல்வியாக்குவதால் விளையும் பயன்களைப் பட்டியலிடுக.

32. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' – இது யார் கூற்று? விளக்குக.

33. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா? என்பது குறித்த சிந்தனைகளை எழுதுக.

### பிரிவு –2 (3x5 =15)

**எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.**

34. வைத்தியநாதபுரி முருகன், அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.

35. "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது" – இடம்சுட்டிப் பொருள் தருக.

36. "மாளாத காதல் நோயாளன் போல்" - உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

37. மலைபடுகடாம், ஆற்றுப்படை – இவற்றின் பெயர்க் காரணங்களை எழுதுக.

38. 'பொன் ஏர் பூட்டுதல்' தமிழர் பண்பாட்டின் மகுடம் என்பதை **'ஏர் புதிதா?'** கவிதைவழி நயம்பட வரிசைப்படுத்துக.

### பிரிவு –3 (4x5 =20)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**39. பொருத்துக.**

| | |
|---|---|
| (i) பாவலரேறு | **அ.** செய்குதம்பிப் பாவலர் |
| (ii) சிந்துக்குத் தந்தை | **ஆ.** கம்பர் |
| (iii) கல்வியில் பெரியவர் | **இ.** தமிழழகனார் |
| (iv) சந்தக்கவிமணி | **ஈ.** பாரதியார் |
| (v) சதாவதானி | **உ.** பெருஞ்சித்திரனார் |

**40. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

பேரரசனது மெய்ப் புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி; பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து மெய்க்கீர்த்தி அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும்

வரலாற்றையும் முறையாகக் கூறி, அவன் தன் தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனவும் கூறி, பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியை அது குறிப்பிடும்.

சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை. முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில்தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதன்கண் வமிச பாரம்பரியம் விதந்து ஓதப்படவில்லை; ஏனைய பகுதிகள் உள்ளன. எனினும் இது மிகவும் சுருக்கமாகவே உள்ளது. இன்னும், பின்வந்த மெய்க்கீர்த்திகள் வமிச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியுள்ளன.

**(i)** மேலுள்ள உரைப்பத்தி எதைப் பற்றிப் பேசுகிறது?


**(ii)** பத்தியில் இடம்பெற்றுள்ள இணைப்புச் சொற்களை எடுத்தெழுதுக.

**(iii)** பத்தியில் அமைந்துள்ள வியங்கோள் வினைமுற்றுச் சொல் எது?

**(iv)** பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து குறிப்பிடுக.

**(v)** பத்தியைப் படித்துப் பொருத்தமான தலைப்பை இடுக.

*41.* படம் உணர்த்தும் கருத்தை நயமாக ஐந்து தொடர்களில் குறிப்பிடுக.



*42.* '**நவமணி வடக்க யில்போல்**' எனத் தொடங்கும் தேம்பாவணியின் மனப்பாடப் பகுதியை எழுதுக.

## பகுதி IV

## மதிப்பெண்கள் : 16

**விரிவாக விடையளிக்க.** **(2x8=16)**

*43.* (அ) உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான்...இப்படியான தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு தண்ணீர் தன்னைப் பற்றிப் பேசினால்.................... உங்களுடைய கற்பனையில் விவரித்து எழுதுக.

**அல்லது**

(ஆ) சங்க இலக்கிய பாடல்கள் மூலம், உங்களைக் கவர்ந்த நான்கு அறக்கருத்துகளைத் தொகுத்து விவரிக்க.

**44.** (அ) **'சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்' என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.**

அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கைக் காட்சியைப் பெரிய கலை நிகழ்வாகவே காட்டும் கம்பனின் கவி நயம்…………………….

இவ்வுரையைத் தொடர்ந்து எழுதுக.

**அல்லது**

(ஆ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டுத் தமிழின் பெருமைகளை விவரிக்க.

26/7/2019
K. Srinivasan

# வெற்றிக்கு வழி

## அரசு மாதிரி வினாத்தாள் 2019-20 (Key)

## *10ஆம் வகுப்பு - தமிழ் முதல் தாள்*

## (செய்யுள், உரைநடை)

### பகுதி – I (மதிப்பெண்கள் - 14)

| பலவுள் தெரிக | | | |
|---|---|---|---|
| 1.அ | காசிநகரத்தின் பெருமையைப் பாடும் நூல் | 6.ஈ | செய்தி – 1 (சரி)<br>செய்தி – 2 (சரி) |
| 2.இ | பறை | 7.அ | இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது. |
| 3.ஈ | மன்னன் இறைவன் | 8.அ | சங்க இலக்கியங்கள் |
| 4.ஆ | சிலநேரங்களில் சில மனிதர்கள் | 9.ஈ | செயற்கை நுண்ணறிவு |
| 5.அ | புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை | | |
| **பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.** | | | |
| 10.ஆ | சிலப்பதிகாரம் | 13.இ | சுண்ணம், அகில் |
| 11.இ | நெய்பவர் | 14.அ | பட்டினும், கட்டு |
| 12.அ | பகர்வனர், பட்டினும் | | |

### பகுதி – II (மதிப்பெண்கள் - 20)

### பிரிவு – 1

| | |
|---|---|
| 15. | • ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இந்திர மனிதனே பெப்பர்.<br>• இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ.<br>• பெப்பரை வரவேற்பாளராகவும், பணியாளராகவும் வீடுகளிலும், வணிக நிறுவனங்களிலும், உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகின்றனர். |
| 16. | வள்ளல்கள் “இல்லோர் ஒக்கல் தலைவன்”, “பசிப்பிணி மருத்துவன்” என்றெல்லாம் போற்றப்பட்டனர். |
| 17. | வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 30 |
| 18. | வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 82 |
| 19. | வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 294 |
| 20. | அ) பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபுசார்ந்த கலைகளில் ஒன்று?<br>ஆ) உண்மையான செல்வம் என்பது எது? |
| 21. | வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 169 |

### பிரிவு – 2

| | |
|---|---|
| 22. | வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 123 |
| 23. | • உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும். – உயிரினும் ஓம்பப் படும்.<br>• ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது – நடு ஊருள் நச்சுமரம் பழுதற்று<br>• விரும்பப்படாதவர் செல்வம் – நச்சப்படாதவன் செல்வம்<br>• ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் – ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |

Way to Success

| | |
|---|---|
| 24. | வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 294 |
| 25. | **உவமை விளக்கம் :**<br>நெற்பயிர் வளர்ந்து கதிரை என்று நெல்மணிகளைக் காணும் முன்னரே மழைத்துளி இல்லாமல் காய்ந்து விட்டது போல என்பது உவமை.<br>**பொருள் விளக்கம் :**<br>திருமுழுக்கு யோவான், கானகத்தில் தன் தாயார் எலிசபெத் அம்மாளுடன் வாழ்ந்த சுழலில் அவருடைய தாயார் இறந்து விட்டார். எனவே நெற்பயிர் கதிரை ஈன்று நெல்மணிகள் முற்றுவதற்கு முன்னால் மழையின்றிப் பட்டுப் போனதைப் போல, திருமுழுக்கு யோவான் வளர்ந்து பெரிய மனிதராகி இச்சமுதாயத்திற்கு நற்பலன்களை வழங்குவதற்கு முன்னரே அவருடைய தாய் எலிசபெத் இறந்து போனது, நெற்பயிர் காய்ந்தது என்ற உவமைக்குக் கருத்தாக அமைகிறது. |
| 26. | வேதாரண்ய புராணம், மதுரை பதிற்றுப்பத்தந்தாதி |
| 27. | வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 261 |
| 28.★ | **செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்**<br>**தியற்கை அறிந்து செயல்.** |

## பகுதி – III (மதிப்பெண்கள் - 50)

### பிரிவு – 1

| | |
|---|---|
| 29. | வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 95 |
| 30. | எழுதுவதற்கான காரணம் என்ன?<br>எதற்காக எழுதுகிறேன்?<br>• நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு. என் எழுத்துக்கு ஒரு இலட்சியமும் உண்டு.<br>• நான் எழுதுவது முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளைவும் எனது தனிமுயற்சியின் பயனுமாகும்.<br>• கலைத் தனிமைக்கு எவ்விதக் குறைவும் வராமல், கலாதேவியின் காதற் கணவனாகவும் சமுதாயத் தாயின் அன்புப் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்.<br>• நான் சொன்ன காரணங்களுக்குப் புறம்பாக நடந்தால் நான் கண்டிக்கப்படவும் திருத்தப்படவும் உட்பட்டிருக்கிறேன் என்கிறார். |
| 31. | • மொழிபெயர்ப்பை கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்.<br>• பல அறிவுத்துறைகளுக்கும் தொழில் துறைகளுக்குக் வெளிநாட்டவரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ள முடியும்.<br>• மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும், வேலைவாய்ப்புத் தளத்தை உருவாக்க முடியும்.<br>• நாடு, இன, மொழி எல்லைகள் கடந்து ஒருலகத்தன்மைப் பெற முடியும். |
| 32. | • சென்னை மாகாணத்திலிருந்து பிரிந்து ஆந்திரம் அமைவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த நீதிபதி வாஞ்சு தலைமையிலான ஒரு நபர் ஆணையம்.<br>• ஆந்திரத்தின் தலைநகராகச் சென்னை இருக்க வேண்டும் என்று இடைக்கால ஏற்பாட்டினைப் பரிந்துரைத்திருப்பதாக அதிகாரப்பூர்வமற்ற கருத்துகள் நிலவின.<br>• இதையொட்டி, மாநகராட்சியின் சிறப்புக் கூட்டமொன்றை அப்போதைய மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூட்டினார்.<br>• சென்னை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்து “தலையைக் கொடுத்தேனும் தலைநகரை காப்போம்” என்று முழங்கினேன். |
| 33. | வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 123 |

*பிரிவு – 2*

| | |
|---|---|
| 34. | வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 189 |
| 35. | வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 295 |
| 36. | வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 123 |
| 37. | வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 101 |
| 38. | • மண்ணைத் தயார் செய்தல் வேண்டும். இது உழுதல், சமன்படுத்தல் மற்றும் உரமிடல் ஆகிய செயல்களை உள்ளடக்கியது.<br>• உழுதல் என்பது கீழ்மண்ணை மேலே கொண்டு வருதலும் அதன் கடினத்தன்மையை நீக்கி மென்மையாக்குதலும் ஆகும். எருதுகள் மற்றும் ஏர்கலப்பையைக் கொண்டு உழுதல் பாரம்பரியமுறை.<br>• மண்ணில் விதையை ஊன்றும் செயலுக்கு விதைத்தல் என்று பெயர். விதைகள் தரமானதாகவும், தொற்று நோய்க்கிருமிகள் இல்லாததாகவும் இருக்க வேண்டும்.<br>• உரங்கள் மூலம் தாவரங்கள் மண்ணிலிருந்து தனது வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டசத்தினைப் பெறுகின்றன.<br>• விதை முளைத்தல், மண்ணிலிருந்து ஊட்டச்சத்தை உறிஞ்சுதல் மற்றும் ஒளிச்சேர்க்கை போன்ற செயல்களை செய்ய தாவரங்களுக்கு நீர் இன்றியமையாதது. ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் தாவரங்களின் வளரச்சிக்காக நீர்ப்பாய்ச்சும் செயல் நீர் மேலாண்மை எனப்படும். விவசாயிகள் பற்றாக்குறையினை நிரப்ப நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்துகின்றன.<br>• சாகுபடி செய்யப்படும் பயிரினூடாக வளரும் தேவையற்ற புல் முதலிய களைச் செடிகளை விளைநிலத்திலிருந்து நீக்கும் செயலுக்கு களையெடுத்தல் எனப்பெயர். பொதுவாக களைச்செடிகள் மனிதர்களால் வேருடன் பிடுங்கி எறியப்படுகின்றன.<br>• வயல்கள் வறண்டபின் நெல்மணிகள் நன்கு முதிர்ச்சி அடைந்துவிடும். பிறகு அறுவடை செய்வார். பிறகு சேமித்து வைத்து சந்தைக்கு அனுப்பி வைப்பர். |

*பிரிவு – 3*

**39. பொருத்துக.**

| | |
|---|---|
| i) பாலலரேறு | **உ) பெருஞ்சித்திரனார்** |
| ii) சிந்துக்குத் தந்தை | **ஈ) பாரதியார்** |
| iii) கல்வியில் பெரியவர் | **ஆ) கம்பர்** |
| iv) சந்தக்கவிமணி | **இ) தமிழழகனார்** |
| v) சதாவதானி | **அ) செய்குதம்பிப் பாவலர்** |

40. (i) மெய்க்கீர்த்திகள் பற்றி பேசுகிறது.
(ii) உடைய, எனினும்
(iii) நீடு வாழ்க
(iv) வமிச பாரம்பரியம்
(v) மெய்க்கீர்த்திகள்

41. **படம் உணர்த்தும் கருத்துக்கள் :**

- செயற்கைத் தொழில்நுட்பம் நமக்கு உதவி செய்கிறது.
- அதில் தேவையான எல்லாத் தகவல்களையும் நாம் பதிவு செய்து கொள்ளலாம்.
- நமக்குத் தேவைப்படும் போது தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
- நமக்கு ஏதேனும் புத்தகம் வேண்டுமென்றாலும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- அதைவிட வசதி என்னவென்றால், இதையெல்லாம் நாம் வீட்டிலிருந்த படியே செய்ய முடியும்.
- இயந்திரங்கள் நம்மை மாதிரி யோசிக்காவிட்டாலும், அவற்றால் நமக்குப் பல நன்மைகள் உண்டு.

42. **தேம்பாவணி**

**(இயற்கை கொண்ட பரிவு)**

நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே.

***- வீரமாமுனிவர்***

***பகுதி – IV (மதிப்பெண்கள் - 16)***

| | |
|---|---|
| 43. | (அ) வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 49 |
| | (ஆ) வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 271 |
| 44. | (அ) வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 192 |
| | (ஆ) வெற்றிக்கு வழி கையேட்டில் பக்க எண் - 12 |

Way to Success